உ

Koviloor Digital Library

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

# கரண இலக்கணம்



ACC. NO.
46362

நூலாசிரியர் "தமிழ்வேத நாவலர்"
"வைத்தியமணி"
உயர்திரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

நூல் பல கல் - பிழைபடச் சொல்லேல் - ஔவையார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/1

உ

சிவமயம்

# கரண இலக்கணம்

நூலாசிரியர்

தமிழ்வேத நாவலர் "வைத்தியமணி"

உயர்திரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை..

இஃது

தேவகோட்டை திரு.அ.ராம.அ.லெ.அ.முவீ.

செம்பொன் (எ) அருணாசலம் செட்டியார் அவர்கள்,

ஆர்வத்தினாலும், பேரன்பினாலும்

தேவகோட்டை அழகப்பா ஆப்செட் பிரிண்டர்ஸில் பதிப்பிக்கப்பெற்றது.

வெளியீடு :

முத்தமிழ் வேதத்திருச்சபை

முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளி

வ.பெரி.மு.தெரு. தேவகோட்டை - 630 302.

02-02-2000

பிரமாதி ஆண்டு

தைத்திங்கள்

௰௯ தேதி

புதன்கிழமை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR

46362

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

தமிழ்வேதநாவலர்
"வைத்தியமணி"
உயர்திரு சித.வே.ஷண்முகநாத பிள்ளை

பதிப்பாளர்
செம்பொன் (எ)
முவீ.அருணசலம் செட்டியார்

உரைவிளக்க ஆசிரியர்
புலவர் திரு.க.அப்பாராசன்

Koviloor Digital Library

5/1

Justice Doraiswamy Raju

**JUDGE, SUPREME COURT OF INDIA**

**New Delhi, the 25th February 2000..**

அருமை நண்பர் தேவகோட்டை திரு. செம்பொன் (எ) முவீ. அருணாசலம் செட்டியாரவர்கள் "கரண இலக்கணம்", எனும் நூலுக்கு அணிந்துரை வழங்க வேண்டி கேட்டுக் கொண்டதின் பேரில், தவிர்க்க இயலாது இதை எழுதத் துணிந்தேன்.

தமிழ் எண்கள் தான் - கரணம் எனும் அடிப்படையில், அவற்றினில் பொதிந்து கிடக்கும் சூக்கும இரகசியங்களையும், கருப்பொருள் பற்றிய மரபு வழிவகைகளையும் கரண இலக்கணம் எனும் இந்நூலில் ஆசிரியர் விளக்கமளித்துள்ளார்கள்.

"எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு", என்பது வள்ளுவம். எண்கள் கணிதத்திற்கு மட்டும் ஆனவையல்ல. மற்றும் எண்ணங்களை வெளியிட எழுதுவதற்கு உதவும் சாதனம் மட்டுமல்ல என்பதுடன், ஒவ்வொரு எண்ணும் தமிழில் அதற்கான குறியீடும் ஆழ்ந்த மெய்ஞ்ஞானக் கருத்துக்களையும், சிவரகசியங்களையும் தன்னகத்தே கொண்ட சிவஞான போதமாக விளங்குவதை புடம் போட்டு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக்கியிருப்பது நூல் சிறப்பாகும். எண்களாயினும் சரி, அதற்கான குறியீட்டு எழுத்துக்களாயினும் சரி, அவை சப்தமயமானவையும் கூட. ஓசை ஒலியெலாம் ஆனாய்நீயே என இறைவன் சிறப்பிக்கப்படுவதும் இதனால் தானோ என எண்ணத் தோன்றுகிறது. 'சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி', என்பதும் இதன்பாற்பட்டதே எனலாம்.

மூலாதாரத்திலிருந்து மூண்டெழும் கனல் சகஸ்ராரத்திற்கு செல்லுவதற்காக அமைந்த ஒன்பது தலங்களை உணர்த்து முகத்தான், முதல் எண்ணாகிய ஒன்றினைக் குறிக்கும் குறியீடாகிய, 'க' எனும் ககாரத்தில் தொடங்கி பத்தாம் பதியுடன் ஒன்றியதால் உயிர்ப்பெற்று, ஒன்று + பத்து என்றாகிப் புணர்ந்ததனால் உண்டாகிற ஒன்பது என்பதனைக் குறிக்கும் குறியீடான 'கூ' என்பதன் மூலம் சகஸ்ராரம் அடைந்துவிட்ட நிலைதனை எடுத்தியம்புவதாக உள்ளதன் சூக்குமத்தை உணர்த்தும் ஆசிரியரின் பாணி மற்றும் பணி சிறப்பாக அமைந்துள்ளதாகப்படுகிறது. ஒன்றாகிய உயிர், பத்தாகிய பதியுடன், ஓரணுவாய் பதியச் செய்து கொண்டு நிலைபெறும் நிலையினை தன்மையினை, பாசுபதம் எனும்

Koviloor Digital Library

அதி அற்புதமான, அதிவல்லமைபடைத்த ஆயுத்தன் ரூபமாகிய ய எனும் எழுத்தே கணித எண் பத்தைக் குறிப்பதாக அமைந்திருப்பதை ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது. ஈடு இணையற்ற, இரண்டென்று ஒன்று இல்லாத பரமாகிய ஒன்றும், சூனியமும் ஒன்று சேர்ந்து கணித எண் 10ஐக் குறிப்பது பரசிவத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு வாசிக்கலையால் இறைவனை அடைய யோகசாதனப் பயிற்சியில் உடல் உயிரது கூட்டி இயங்கும் நிலையில் நாம் எந்நிலையில் அகத்தின் கண் உள்ளோம் என ஆராய்ந்து அறிய, குறிப்பில் குறிப்புணர ஆக்கி தந்தது தான், கரண இலக்கணம் எனும் இந்நூல். நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றவைக்கும் இந்நூலின் பயன் அறம், பொருள், இன்பம்தேடி வீடுபேறு அடையவைக்கும் அதி உன்னத சாதனம் என்றால் மிகையாகாது.

இத்துணையளவு ஆன்மீக இரகசியங்கள் பொதிந்துகிடக்கும் நூலினை இயற்றிய நூலாசிரியன் புலமை, நுண்ணறிவு மற்றும் ஆன்மீக முதிர்ச்சி வியக்கத்தக்கது எனலாம். இத்தகு, அரும்பெரும் ஆன்மீகப் பெட்டகமாய் அமைந்துவிட்ட நூலின் தரம் மற்றும் பயன் உணர்ந்து, அதனைப் பதிப்பிக்க ஆர்வமுடன் முன்வந்துள்ள திரு.செம்பொன் (எ) முவீ.அருணசலம் செட்டியாரவர்களின் அருந்தொண்டு, அன்னாருக்கு தமிழின் மீதும், தமிழ்மறை போற்றும் பரசிவத்தின் மீதும் உள்ள மோகத்தினையும் மற்றும் ஆன்மீக வளர்ச்சியில் அன்னாருக்கு உள்ள அக்கரையையும் எடுத்தியம்புவதாக உள்ளது. நான் அறிந்தமட்டில் திரு.செம்பொன் அவர்களின் தமிழ்ப்பற்றும் மட்டும் சைவசமய இலக்கியப் புலமை மற்றும் ஈடுபாடும் வியக்கத்தக்கது மட்டுமன்றி பாராட்டுதலுக்குரியது.

ஆன்மீகத் துறையில் குறிப்பாக சைவத்தின்பால் ஈடுபாடுகொண்டோர் ஒவ்வொருவரும் படித்து, சிந்தித்துப்பார்த்து, சிறப்படைய வழி செயும் சீரிய மற்றும் சிறப்பான சாதனமாக இந்நூல் அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நூலினை வெளிக்கொணர்வதில் பங்கேற்கும் அனைவரும், பாராட்டுக்குரியவர்கள், இறைவன் அருளுக்கும் பாத்திரமாவார்கள் எனச் சொல்லி வேண்டி வாழ்த்துவேனாக..

(நி.பெ.க. துரைசாமி ராசு)

Koviloor Digital Library

உ

சிவமயம்

# நன்றியுரை:

நலந்திகழும் பிரமாதி வருடம் ஆவணி மாதம் 7ஆம் தேதி (24-8-99) செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிக்கு முத்தமிழ் வேதத்திருச்சபை 22-ஆவது ஆண்டு நிறைவு விழா சிவநேசச்செல்வர் உயர்திரு.பழ.சோம. கைலாசநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் சிறப்புச் சொற்பொழிவிற்குச் சிறந்த சிவநேசச் செல்வரைத் தேடினோம். தேடிய தேட்டத்தில் கிடைத்தவர்தான் உயர்திரு.முவீ. செம்பொன் அருணாசலம் செட்டியார் அவர்கள். அவர்கள் பரம்பரையே தேவாரத்தை உயிர் மூச்சாகக்கொண்டு இயங்கி வருகிறது என்பதைக் கேட்டு ஆனந்த பரவசம் அடைந்தோம். உடன்சென்று சிவநேசச்செல்வரை அணுகினோம். அவர்களும் எங்களை முகமலர்ச்சியோடு வரவேற்று, விஷயம் என்ன என்று கேட்டார்கள். முத்தமிழ்வேதத் திருச்சபை நிறுவிய எங்கள் தெளிவு குருவைப்பற்றி ஜோதிடம் கணிப்பதில் வல்லவர் என அறிந்திருந்தார்கள். நாங்களும் தேவாரப்பண் பற்றி ஆராய்ச்சி செய்தவர் எம் குருநாதர், அதைத்தான் சபையில் பௌர்ணமி தோறும் ஆராய்ந்து வருகிறோம் என்றோம். குருநாதர் இயற்றிய நூல்கள் பலவற்றையும் எடுத்துக் கூறினோம். உடனே சிறப்புச் சொற்பொழிவிற்கு இசைந்தார்கள். அன்றைய தினம் சிறந்த சொற்பொழிவும் ஆற்றினார்கள். அதில் "அப்பர் சுவாமிகளுக்கு கல்லைத் துணையாகக் கட்டி கடலில் போட்டதினால் தான் அவர் கரையேறினார் என்றும், தனியாகக் கடலில் போட்டிருந்தால் கரையேறியிருப்பாரா? என்ற ஆழ்ந்த கருத்தை, நம்பும் அடியவருக்குக் கல்லாகவும் துணை இருப்பார் என்று கூறிய விதம் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்தது. மேலும் குருவின் "கரண இலக்கணம்" நூலை பதிப்பித்துத் தருகின்றேன் என்றார்கள். அவர்கள் சொல்லியபடியே மிகுந்த பரிபக்குவத்துடன் "கரண இலக்கணம்" நூலைத் தன் ஆர்வத்தோடு பொருட்செலவுடன் நமக்கு பதிப்பித்துத் தந்திருக்கிறார்கள். அன்னாரின் பரம்பரைக்கு முத்தமிழ் வேதத் திருச்சபையார் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், நம் நாட்டின் உச்ச நீதிமன்ற மேன்மை தங்கிய கனம் நீதிபதி உயர்திரு.துரைசாமி இராசு அவர்களிடம் இந்நூலுக்கு மனமுவந்து அணிந்துரை பெற்றுத் தந்தது பெரிதும் சாலச்சிறந்தது, பெருமையுங்கூட; நட்பிற்கு இலக்கணமாகவே எண்ணத் தோன்றுகிறது. மேதகு நீதிபதி அவர்களும் அன்னாரின் குடும்பத்தினர் அனைவரும் எல்லா நலனுடன் பன்னெடுங்காலம் நீடுவாழ, உண்ணாமுலை உடனாகிய திருஅண்ணாமலைப் பெருமான் திருவடி எண்ணி வழுத்துகின்றோம். வாழ்க. தெளிவு குருவின் நல்ஆசி என்றும் அவர்களின் பரம்பரைக்கு உண்டு. அவர்கள் செய்யும் தமிழ்த் தொண்டு தொடர, தரணியெல்லாம் மணக்க மங்கலம் பெருகுக என எழுதி நிறைவு செய்கிறோம்.

03-03-2000<br>
பிரமாதி ஸ்ரீ<br>
மாசி மீ உ௰உ

இங்ஙனம்

**முத்தமிழ் வேதத் திருச்சபையார்.**

Koviloor Digital Library

உ
சிவமயம்

முதற்பதிப்பு:
03-03-2000

விலை: ரூ.6/-

கிடைக்குமிடம்:
முத்தமிழ் வேதத்திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளி
வ.பெரி.மு.தெரு
தேவகோட்டை - 630 302
சிவகங்கை மாவட்டம்.

Koviloor Digital Library



உ
சிவமயம்

# கரண இயல்

## முன்னுரை

சாத்தாமகான், திருமிகு சித.வே.ஷண்முகநாதனுர் அவர்கள் கலைகள் பலவற்றில் வல்லவர்கள். அட்டாங்க யோக சித்தி பெற்றவர்கள். தமிழ்மொழி சிவமாந்தன்மையினைத் தாம் இயற்றிய அகத்தியம் என்னும் முதல் நூலாம் இலக்கணத்தின் மூலம் தெளியச் செய்திருக்கிறார்கள்.

பெருந்தகையார் அவர்கள் இயற்றிய நூல்கள் பல. திருமுறைப் பெருநூல் விளக்கம். உயிர்நிலைக்கலை இலக்கணம், பண்ணிசை இலக்கணச் சூக்கம், முத்திநெறி இலக்கணம், இராமாயண இலக்கியம், ரோக நிவாரணத் தொகுதி இன்னும் பலவாம். கரண இயல் என்னும் தமிழ் எண் வடிவ இலக்கணம் யோகாந்தம் என்னும் பகுதியைத் தெளிவுற விளக்குகின்றது.

பெருந்தகையார் அவர்கள் என்மீது கொண்ட பரிவும், கருணையும் அளவிடற்பாலதன்று. பெருந்தகையார் அவர்களிடம் பாடங்கேட்ட தன்மையால் அவர்கள் இயற்றிய கரண இயல் என்னும் சிறந்த இந்நூலுக்கு உரைவிளக்கம் செய்திருக்கிறேன். இதன்கண் உள்ள பிழைகளைப் பெரியோர்கள் பொறுத்து, எனக்கு ஊக்கந்தருவார்கள் என்று பெரிதும் நம்புகின்றேன்.

இங்ஙனம்
*புலவர் க. அப்பாராசன்*

Koviloor Digital Library



உ
சிவமயம்

# கரண இலக்கணம்

கரண இலக்கணம் என்னும் நூல் ஆசிரியர், தேவகோட்டை, சாத்தாமகான், தமிழ்வேதநாவலர் வைத்தியமணி சித.வே. சண்முகநாத யோகீஸ்வரர் அவர்கள் ஆவர்.

உரை விளக்க ஆசிரியர்

தஞ்சாவூர் களிமேடு அப்பர் அவைப்புலவர், திருமுறைச் செல்வர், நல்லாசிரியர், புலவர் க.அப்பாராசன் அவர்கள், முன்னுள் தமிழாசிரியர் தேபிரித்தோ மேனிலைப்பள்ளி தேவகோட்டை.

## காப்புச் செய்யுள்

சற்குரு நாதன் தண்ணளித் தாள்மலர்
நற்கர ணஉரை நவிலக் காப்பாம்.

## உரை

சற்குரு நாதப் பெருந்தகையின் தண்ணளியாம் கருணையை நல்கும் திருவடியாகிய தாமரையே நல்லகரண இயலாகிய தமிழ் எண்களின் உருவ நீர்மையை விளக்கந்தருதற்குத் துணையாக அமையும்.

இறைவனுர் இயல்பை இனிதாக விளக்கி மாணவர்கள் ஏற்றம் பெற நிற்பார் யாவர்? அவரே சற்குருநாதன் எனச் சாற்றப் பெறுகிருர்.

ஆவளியென்னும் வாசி, நாசி வழியே சென்று வீணுகாமல், அந்த ஆவளி தோன்றிய மூலத்தின் கண்ணே ஒன்றச் செய்யும் வல்லவம் உடையார் யாவர்? அவரே சற்குருநாதன் ஆகிருர். அவர்களின் திருவடி தண்ணளி உடையன; மலரின் மென்மையுடையன. அத்தகு திருவடியே

Koviloor Digital Library



தமிழ் மொழியின் கரண இயல் விளக்கம் இனிதே நிறைவெய்தக் காப்பாக விளங்கும்.

சற்குருவே சிவபிரான் என்பதனை

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையும்,"

என்னும் திருவாசக அகவலும்

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி

என்னும் திருமந்திரமும் தெளிவாக விளக்கும். எனவே சற்குருநாதப் பெருந்தகையின் திருவடியும் சிவபிரான் திருவடியே ஆகும்.

## திருவடியின் பெருமையினை

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே

என்று திருமூல தேவநாயனார் கூறுகின்றார். ஆதலின், நாமும் சற்குருநாதன் தாள்மலர் காப்பாம் என்று கூறினோம்.

## நூற்பா - க

முதலும் நடுவும் முடிவிலா ஈறும்
ஆன எழுத்து உஅன்றென நின்று
நாம ரூபம் ஆம் அது கடந்த
தன்மை யெழுத்தாய்ச் சமைவு கொண்ட
விளக்கம் உடைத்தாம் இலக்கணம் ககரம்

(க)

## உரை விளக்கம் - க

ககரம், ஒன்று என்னும் எண்ணின் குறியீடாய் அமைந்துள்ள காரணத்தை இந்த நூற்பாவால் விளக்குகின்றார்கள் பெருந்தகையார் அவர்கள்

Koviloor Digital Library



ககரம் (க) என்னும் எழுத்தானது, முதலும், நடுவும், வரையறுக்க முடியாத ஈற்றினையும் கொண்டதாகும். இது இரண்டல்ல ஒன்று என்னும் எண்ணின் குறியீடாகும். மூலாதார வட்டமும், சுகவதிட்டானச் சதுரமும் ஆகிய வடிவுத்தன்மையை விளக்கும் இயல்பினை உடையதாகும். ககரம் சொல்லின் முதலிலும், நடுவிலும் ஈற்றிலும் வரும் தன்மையது.
எடுத்துக்காட்டு: கனி, அகம், உண்க.

மேலே சதுரம் கீழே நீள்வட்டமும் ஆகிய தன்மையுருவினைக் ககரம் பெறுகின்றது. வட்டம், மூலத்தின் வடிவம் ஆகும். இதுதனித்து நில்லாத் தன்மையது ஆதலின், சுகவதிட்டானத்தின் சதுரத்தையும் பெற்று நிற்கும் தன்மையதாய் விளங்குகின்றது.

○ வட்டம் ஆகாயத்தின் வடிவமாகும். இது ஏனைய பூதங்கள் தோன்றுதற்குரிய சூக்குமமாக அமைந்துள்ளது.

□ சதுரம், நிலத்தின் தன்மையைப் பெற்று ஏனைய பூதங்களின் இயல்பினை விளக்கும் தன்மையதாகிறது. இது பூதங்களின் தூலமாக அமைகிறது. தூலமும் சூக்குமமும் இருவகையாக விளங்கினும் ஒன்றின் தன்மையேயாம்.

உ + அன்று என்பது ஒன்று என ஆயிற்று. உ என்பது தமிழ் எண்ணின் இரண்டினைக் குறிப்பது. அன்று என்பது இரண்டு அல்ல என்பதைக் குறிப்பதாகும்.

உ என்னும் விந்தெழுத்து அ என்னும் உயிருடன் கூட ஒகரமாம் விந்துயிர் மெய் தோன்றி, உச்சியில் புள்ளி பெறும். சொல்லின் முதலில் மெய்வாராதாகலின், ஒகரம் புள்ளியை விட்டு ஒன்று என ஆகியது. இப்புணர்ச்சி நிலையை நடைமுறைப்படுத்த நாள் பல செல்லும்.

"அகர உகரம் ஒகரம் ஆகும்" என்பது தொல்காப்பியம். இதுமுறையே ஒகரம் தோன்றும் நிலை. "உகர அகரம் ஒகரம் ஆகும்" என்பது தோன்றும் நிலையாம். அ உ ஒகரமாயினும் உ அ ஒகரமாயினும் ஒன்றேயாம். உ அ ஒ எனப்புணர்வதற்கு விதிமுறையை விளக்க வேண்டும்.

Koviloor Digital Library



## நூற்பா - உ

ஏற்றம் இறக்கம் எய்தும் கால்நடப்
பண்டிய தால்ர அண்டென மொழிய
இடவல மாகி இயையுரு வெழுத்தாய்
அமையு மிலக்கம் ஆகும் உகரம்

(உ)

## விளக்கம்

இந்த நூற்பா இரண்டு என்று சொல்லுதற்குரிய காரணத்தையும், உ என்னும் உருவ அமைப்பினையும் விளக்குகின்றது.

## விளக்கம்

முன்னே செல்லுங்கால் ஏற்றமாகவும், திரும்புங்கால் இறக்கமாகவும் அமைவது காலின் செயற்கூறுபாடாகும். இங்ஙனம் இயங்குவது ரகரத்தின் வடிவமாக இருக்கும்.

இவ்வாறு ர என்னும் உருவத்தை அண்டியிருப்பதால் 'ர' அண்டு இரண்டு என்று வாக்கினுல் சொல்லப்பெறுகின்றது.

இதன் வடிவம், இடமாகவும், வலமாகவும் திரியும் அமைப்பினைக் கொண்டது. இந்தச் செயற்பாட்டின் தன்மையினை உ என்னும் எழுத்து ஏற்றிருப்பதால் இது இரண்டின் செயலை வடிவத்தால் உணர்த்துகின்றது.

ெ இந்த வடிவம் உயிராம் அணு விந்துவில் சுழித்து நிற்பதைக் காட்டுவதாகிறது.

● இஃது உயிர் ஆகிய அணுவாம். ெ இந்த வடிவம் உயிரணு நாதத்துடன் தொடர்பு கொண்டுள்ளதைக் காட்டும்.

ெ இந்த வடிவம் உயிரணு நாதத்துடன் கூடி விந்துவில் சுழித்துள்ள தன்மையைக் காட்டுவதாகிறது. உ இந்த வடிவம் மறுபடியும் இடம் இருந்து வலமாகச் செல்வதாகிறது. இங்ஙனம் இடம் வலம் ஆகிய இரண்டாகவும், ஒன்ருக இறைவனை ஒன்றி நின்ற உயிரணு இரண்டாகப்

Koviloor Digital Library



பிறப்பெடுக்கும் செயற்பாட்டினையும் விளக்குவதால் 'உ' என்னும் இவ்வடிவம் இரண்டு என்பதன் இலக்கத்தின் குறியீடாக அமைகிறது.

உயிரானது, நாதத்தினையொன்றி விந்துவில் சுழித்துப் பிறப்பெடுக்கும் நிலையையே உ என்னும் இலக்கக் குறியீடு உணர்த்துகின்றது.

## நூற்பா - ௩

சரந்திர மாகச் சஞ்சரித்துத் திரியும்
திரியை திரிபறச் செய்ய இம்மென
ஊன்ற லாம்மூன் றொலியும் உருவில்
சரந்திரம் உபயத் தன்மை காட்டும்
வடிவெழுத் திலக்கம் ஆகும் (௩)

## விளக்கம்

இந்த நூற்பா சரமாகவும் (ஒன்றாகவும்) திரமாகவும் திரியும் ஆவளியின் திரிபு நீங்கும்படி செய்தற்கு இம் என மூச்சினை அடக்கி ஊன்றுதலால் மூன்று என்னும் வாக்கொலியும், (வாய்ப்பேச்சும்) தோன்றுகின்றது.

ம் + ஊன்று மூன்று என்று ஆகும். இது செவியால் கேட்கப்படுவதாகிய மூன்று என்னும் சொல்லாம்.

அகக்கண்ணால் உணரும் உணர்வில் சரமாகவும், (ஒன்றாகவும்) திரமாகவும் (இரண்டாகவும்) திரியும் ஆவளி (வாசி)ம் என அழுத்தி மேல்நிலை எட்டச் செய்தலாம் நிலையே மூன்றாகிய செயல்வடிவம் ஆகும்.

இதனை வரிவடிவில் உணர்த்தும் குறியீடே (௩) என்பது ஆகும்.

1 இது சரம் என்னும் ஒன்றினை உணர்த்துவது. ா இக்குறியீடுதிரம் என்னும் இரண்டினை உணர்த்துவது. 2 இக்குறியீடு இரண்டும் இணையும் மூன்றும் உபயத்தை உணர்த்தும் குறியீடு.

இம்மூன்றும் இணையும் (௩) இந்தக் குறியீடே மூன்று என்னும் இலக்கத்தை உணர்த்துவதாகும்.

Koviloor Digital Library



ம் + ஊன்று = மூன்று என்பதற்குப் பெருந்தகையார் கூறும் செயற்கூறுபாடே விதியாக அமைகிறது.

"உடன் மேல்உயிர் வந்தொன், றுவதியல்-பே"
என்னும் நன்னூல் நூற்பாவும்,
"புள்ளியீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவும் வருமொழி முதலில் வரும் உயிரெழுத்து, நிலை மொழியீற்றிலுள்ள மெய்யெழுத்துடன் ஒன்றும் நிலையினை விளக்குவனவாகும்.

ம் + ஊன்று = மூன்று என வருதற்குரிய விதியைக் கூறுவன அல்ல.

ம் + ஊன்று = மூன்று என வருதற்கு யோகசாதன நெறியின் செயற்பாட்டின் முறையினால் பெருந்தகையார் கூறுவது மிகவும் பொருத்தமாகிறது.

மூன்று என்னும் இலக்கத்தை உணர்த்தும் ௩ என்னும் குறியீடு அட்டாங்கயோக சாதனையை உலகுக்கு உணர்த்துவதாகிறது.

நான்மறையின் மேனிலையை உணர்த்தும் உத்தர மீமாம்சையின் உறுபொருளாகவும் விளங்குகின்றது.

பரியங்கி யோகத்தின் பாங்கும் இதனால் தெளிவுறும்.

தமிழ்மொழியின் எழுத்துக்களை உணர்த்தும் வரிவடிவமும், கரணத்தினை உணர்த்தும் குறியீட்டு வடிவமும் கலாந்தத்தையும், யோகாந்தத்தையும் உணர்த்துவனவாய் அமைந்துள்ளன.

## நூற்பா - ௬

உ அன் ழும்என நின்ற வொன்றின்
தன்மை யெழுத்து தன்னியல் தீர்ந்து
புறவெளி நோக்கிப் புறப்புற மாக
நடுநிலை இன்மையால் நாஅல் எனும்பெயர்
எழுத்தாய்க் குறிக்கொள் இலக்கம் (௬)

Koviloor Digital Library



## விளக்கம்

இந்த நூற்பா ஆவளி, அகம், அகப்புறம், புறம் ஆகிய மூன்று நிலைகளின் நீங்கி, புறப்புறமாகச் செல்லும் நான்காம் நிலையை உணர்த்துகின்றது.

உ அன்று (இரண்டு அல்ல) என்பதனை உணர்த்தி ஒன்று என்பதனை உறுதிப்படுத்திக்காட்டும் தன்மையுடையதாகிய ‘க’ என்னும் எழுத்தானது, தன்னுடைய தன்மையுடையதாகிய வட்டம் சதுரம் ஆகிய உருவத்தின் நீங்கி, புறத்தேயுள்ளே ஆகாயத்தினை நோக்கிப் புறப்புறமாக அமையும் எழுத்தாகக் குறியீடு கொள்வது ‘ ’ என்னும் வடிவம் ஆகிறது.

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்பன இடத்தின் வகையினைக் குறிப்பனவாம்.

ஆகம் ஆக அமைந்த பொருளோ
டொன்றிக் கோபதியுறலே அகமாம்

உடல் உண்டாகும்படி அமைந்த பொருளோடு (மூலத்துடன்) ஆன்மா ஒன்றியிருத்தலே அகம் ஆகும்.

ஆன்மா ஒன்றவே ஆவளியும் அதனுடன் ஒன்றியுள்ள தன்மை நன்ருக விளங்கும்.

அகமாய் நின்றது அகப்புற மாகி
மனோநிலை வளியுற வாக்குத் தோன்றும்

மூலமாகிய அகத்தின் ஒன்றி நின்ற ஆன்மா அதனினின்றும் சற்று நீங்கி நிற்கும் நிலையே அகப்புறம் என்று சொல்லப்பெறும். அந்நிலையில் உயிருக்கு மனமும், வாயுவும் தோன்றி வாக்கு என்னும் ஆவளி இயக்கந்தோன்ரு நிற்கும்.

“மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு” என்னும் திருமந்திரத் தொடர் இதனை வலியுறுத்தும்.

வாக்கு ஈரிரு வகையால் ஐம்பத்
தொன்ருய் அகத்தில் தோன்றுவ தகத்தியம்.

Koviloor Digital Library



வாக்கு என்னும் ஆவளியியக்கம் சூக்குமை, வைகரி, மத்திமை, பைசந்தி என்னும் நான்கு வகையில் ஐம்பத்தொரு எழுத்தாக விளங்கும். இவை, அகம், அகப்புறம், புறம் ஆகிய மூவகையான இடங்களில் தோன்றுநிற்கும்.

இம்மூன்று இடங்களிலும் அமையும் எழுத்துக்களே அகத்தியம் என்று சொல்லப்பெறும். இவற்றின் விளக்கத்தினை எம் சற்குருநாதப் பெருந்தகை சாத்தாமகான் எழுதிய அகத்தியம் என்னும் தமிழ் இலக்கண நூலில் காணலாம்.

உ அன்றென நின்றவுருவம் இஃதாம் இஃது புறப்புறமாய்ச் செல்லும் நிலையில் ௬ என்னும் வடிவந்தோன்றும். மூலாதார முட்டை வடிவில் பாதியளவு குறைந்து க, ௬ ஆனதுடன் நில்லாது சமநிலையிலிருந்தும் மேல்நோக்கி ஒரு கோடு செல்கின்றது. அந்த உருவம் இஃதாம். இதுவே புறப்புறமாம் நாலாம் நிலையினை உணர்த்தலின் இது நான்கு என்னும் இலக்கக் குறியீடாக அமைகிறது.

இலக்கம் = எண் என்னும் பொருள் தருவதாகிறது.

## நூற்பா - ரு

வெளியின் சூழற்சியும் வளியாம் காலின்
உருவமும் கொண்ட ஒன்றும் ர்உ
தலைப்பட நிற்றலால் நிலைப்படும் ஐயென
அருவுரு இலக்கமாய் அமைரு (ரு)

## விளக்கம்

ஆகாயத்தின் சுழற்சியும் வளியாம் காற்றின் வடிவமும் கொண்ட ஒன்றுகிய ர் உ என்றவற்றின் வடிவம் உச்சியில் நிற்றலால் ஒரு நிலைப்படும் ஐந்து என்று சொல்லும்படி, வெளியின் அருவநிலையும், காற்றின் உருவ நிலையும் ஆகிய அருவ உருவ இலக்கமாய் அமைந்த ரு என்னும் வடிவம் ஐந்தாம் எண்ணினைக் குறிக்கும் குறியீடு ஆகிறது.

ஆவளியின் வடிவம் ‘ர’ என்பதாகும். இது நாசிவழி வெளியே

Koviloor Digital Library



சென்று மீண்டும் உட்புகும் நிலையைக் குறிப்பதாகும். இந்தச் செயல் ஒரு நாளுக்கு 21600 தடவை நடைபெறுகிறது.

இந்தச் சலன நிலையே மாந்தர் வாழ்நாள் சரிவுக்கும் மனநிலை திரிவிற்கும் காரணமாக அமைகிறது.

இங்ஙனம் திரியும் நிலையானது, ஐம்புலன்களும் தத்தம் நெறியிற் செல்லும் இயல்பினை உண்டாக்குகின்றது. இதனுல் ஆன்மா தன் தூய நிலையை உணராது. கொடியவர் கைப்பட்ட அரசிளங்குமரன்போல் உயர்வினை இழந்து, இழிநிலை எய்துகின்றது.

இந்த அவலநிலை, கொடுமைகள் நிறைந்த நரகமாக அமைந்துவிடுகின்றது. இக்கொடிய துயரினின்றும், நரகத்தினின்றும் ஆன்மாமீள வேண்டுமாயின், ஐம்புல வேடர்களின் பிடியினின்று விடுபட வேண்டும்.

இங்ஙனம் உறுகயிறூசல் போல மனத்துடன் திரியும் உயிருக்கு அதனினின்று மீளும் எண்ணம் வலுப்பட, வலுப்பட, மீளும் மேல்நெறியை உணர்த்தும் வல்லார் தோன்றி திருநிலைப்படுத்தும் உபதசத்தைத் தந்து கருணையுடன் நோக்குவர்.

வல்லார் தந்த உபதசத்தைக் கொண்டு சாதனஞ்செய்யும் முதிர்ச்சியால் ஆவளியானது சுழித்துத் தலையின் கண் செல்லும்.

அவ்வாறு ஆவளி தலையின் கண்ணே உட்புகுந்து செல்லுதலான் ஐம்புலனும் ஒன்றி நிலைப்படும். இந்த ஒருமைப்பாடு ஆன்மாவிற்குப் பேராற்றலைத்தரும்.

இந்த நிலையை விளக்கவே ஐந்தாம் எண்ணின் இலக்கத்திற்கு ரு என்னும் குறியீட்டினை தந்துள்ளனர் தமிழ்ச் சான்றோர்கள்.

தலைப்பட நிற்றலால் நிலைப்படும் ஐயென என்னும் அடி சந்த இன்பத்தோடு யோகசாதன நிலையையும் விளக்கா நின்றது.

ஐந்து என்னும் எண்ணுப்பெயர் இடையும், நிறைவும் கரந்து நின்று ஐம்புலன், நிலைப்படுதல் அரிது என்பதனை விளக்கவே ஐயெனக்குறுகி. வியப்பினைத் தருவதாகிறது.

Koviloor Digital Library



## நூற்பா - ௬

ஏகியேகியஞ் சிடையின மான
அஞ்சுரு வந்தீர்ந்து ஆவினை யுற்றதால்
ஆறு என்று கூறும் ஒலியும்
அஞ்சு நிலமும் மிஞ்சிக் கடந்து
கதிகொள் சாகாக் காலின் உருவும்
அது சென்றேகா தடங்கும் ஒன்றின்
வடிவின் இலக்கமும் ஆகும் ௬ (௬)

## விளக்கம்

இந்த நூற்பாவில் ஆறு என்று கூறப்படும் சொல்லின் நிலையினையும், அதன் வரிவடிவ இயல்பையும் பெருந்தகையார் விளக்குகின்றார்கள்.

இறைவனார் ஆன்மாவிற்குச் சிறந்த இல்லமாக யாக்கையைத் தந்துள்ளார். அந்த யாக்கை ஐம்பூதக் கலவையால் ஆக்கப்பட்டது.

அந்த யாக்கையின் கண் ஆன்மா, ஆவளியின் வழியே ஏகி ஏகி. அந்த உடம்பையே தான் என்று கருதி தன்னிலை மயங்கியது. அந்நிலையின் நீங்கிய ஆன்மா, தன் தகவினை உணர்ந்து தெளிந்தமையால் ஐந்தின்மேல் ஒன்றும் ஆறு என்று கூறப்பெறுகிறது. இதுவே ஆறு என்று கூறப்பெறும் ஒலியின் பொருளாகிறது.

ஐம்பூதக்கலவையால் ஆகிய யாக்கையின் இடையே இனமாகத் திரிந்த ஒன்றாகிய ரகர வடிவங்கொண்ட ஆவளி (வாசி) சுகவதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை ஆகிய ஆதாரங்கள் ஐந்தில் அமைந்துவிடாமல் அவற்றினைக் கடந்து சாகாதகாலாய் (வளியாய்) விளங்கி தனக்குக்கதியாகிய ககர வடிவத்தின் கண் ஒன்றும் வடிவமாகிய (௬) இதுவே ஆறு என்னும் இலக்கத்தைக் குறிக்கும் குறியீடாக அமைகிறது.

'௬' இந்த வடிவமே ஆறு என்னும் எண்ணைக் குறிப்பதாகும்.

பரம்பொருளினின்று தோன்றிய நாதத்தின் தூல சூக்கும நிலையை இவ்வுருவமாகும். இதனையே நாம் ககரம் என்று வழங்குகின்றோம். ஆன்மா இங்குத் தோன்றியே ஆதாரங்கள் ஐந்திலும் வளியோடு ஏகி ஏகி. அவற்றின் நிலைகொள்ளாமலும், தன்னுருவம்

Koviloor Digital Library



கெடாமலும் தனக்குக் கதியாகிய ககரத்தின் கண் நிலைபெற்ற வடிவமே சா.

ஆன்மா வளியோடு அழிவில்லாமல் சென்று ஒடுங்கும் நிலையினையே செம்மை நலஞ்சேர் ஆறு (வழி) என்று கொண்டனர் நம்முன்னோர்.

## நூற்பா - எ

நாத உயிரஃ தான வேகாத்
தலைச் சஞ் சரிகம் தருநல் ஒலியும்
உயிரணு ஒன்ற ஒலிக்கும் நாதமும்
காலும் எழுத்தாய்க் கலந்திசை கொண்ட
வொன்றும் எகர உருவாம் எ (எ)

## விளக்கம் (எ)

இந்த நூற்பா 'எ' என்னும் எகர ஒலி எங்கு எந்தச் செயற்பாட்டால் ஒலிக்கின்றது என்ற நிலையினையும், அஃது, ஏழ் என்னும் இலக்கத்தின் வரிவடிவமாக அமைந்துள்ள தன்மையினையும் விளக்குகின்றது.

நாத எழுத்தாம் இகரமும், உயிரெழுத்தாம் அகரமும் இணையப் பிறப்பதே எகரம் என்னும் ஒலியும், உருவமும் ஆகும்.

"அகர இகரம் எகரம் ஆகும்" என்பது தொல்காப்பியம்.

"இகர அகரம் எகரமாகும்" என்பது எம்பெருந்தகையார் செய்த அகத்தியம் என்னும் முதல் நூலில் கூறப்பட்டதாகும்.

உயிர்நாதத்துடன் இயைவது நெறிமுறையாம் நாதம் உயிரை நண்ணுவது மாறியமையும் முறையாம்.

நாதமும் உயிரும் உயிர்ப்பூவாம் ஆவளியும் மாறுபடாது தலையின் கண்ணே சஞ்சரிக்கும்போது உண்டாகும் ஒலி எகரம் ஆகும்.

மூலம் முதல் அக்க இணைய நிலையமாம் ஆக்ஞையாம் நெற்றியையும் கடந்து சிரத்தினுள் (ஏழம் நிலையுள்) ஆவளி ஆற்றலொடு புகுங்கால் தோன்றும் ஒலியே எகரம் ஆகிறது.

Koviloor Digital Library



இஃது, உயிரணு ஆவளியோடு பொருந்தும் தன்மையால் உண்டாகின்ற நாத எழுத்தாகவும் ஏழாம் இடத்தில் தலைப்படும் நிலையினையும் உடையதாகிறது.

இங்ஙனம் ஏழாம் நிலையாம் தலையில் ஆவளி புகுங்கால் உண்டாகிய ஒலியாகவும் ஏழாம் அத்தினை உணர்த்தும் உருவமாகவும் நிலை பெறுகின்றமையின் ஏழ் என்னும் இலக்கத்தின் குறியீடாக எ ஆகிய எகரம் அமைகிறது.

உயிரணு ஆவளியோடு ஒன்றி சிரத்தில் தலைப்படும் வரையில் தான்.

மணிகடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
முழங்கா நிற்கும்.

ஆவளி, நாதாந்தம் என்னும் ஏழாம் நிலையத்தினின்று, பிடரிவழி சென்று மூலத்தை ஒன்றுங்கால் எவ்வித நாதமும் இல்லையாதலில் நாதம் ஏழிற்குள் அடங்குகின்றது.

ஏழென்னும் வரையறைக்குள் எழுத்தும், இசையும், தாதுப்பொருளும் அண்டமும், பிறப்பும் அமைகின்றன.

இத்தகைய நுட்பங்கள் அமைய எகரத்தை ஏழ் என்னும் இலக்கத்திற்குக் குறியீடாக அமைத்திருக்கின்றனர்.

எண்ணிற்கும், எழுத்திற்கும் இருவகை வடிவும் அமைத்துள்ள நம்முன்னோர்களின் ஞானத்தெளிவினை உணர்ந்து ஊழிக்காலந்தொறும் உவகை கொள்வோமாக.

## நூற்பா - அ

ஆறலை கொண்டே ழாநின் றடர்ந்து
புகாற தடங்கப் போகாப் புனலாய்
எட்ட நிற்கும் இயல்பாம் ஒலியும்
அதுஅ அரவ ஆரமாகையால்
அகர வுருவிலக் காகும் - அ (அ)

Koviloor Digital Library



## விளக்கம்

ஆறு ஆதாரங்களிலும் அலேந்து திரியும் ஆவளியானது, ஏழாம் நிலேயை அடைந்து செறிவுற்றுப் புகுந்தன்மை ஒன்றி ஒடுங்கும் பொருட்டு நாசி வழிச் செல்லாத நீர்மை பொருந்தி உயர்கதியை எட்டுதற்கு நிலேபெறும் இயல்பான ஒலியானது, அகரத்தின் ஓசையாகிய ஆரம் ஆகையால் அகரம் எட்டு என்னும் ஒலியையும், அதற்குரிய இலக்கத்தின் குறியீட்டையும் பெறுகின்றது.

பரத்தின் ஒன்றியமைந்த ஆன்மா அந்நிலேயினின்றும் நீங்கும்போதே மனேநிலே தோன்றப்பெறுகின்றது. அத்துடன் வாயுவாம் வளியும் அமைகின்றது.

மனமும், சுவாசமும் தோன்றிய காரணத்திஞல் ஆவளி ஆறு ஆதாரங்களிலும் அலேந்து திரிகின்றது. இந்தத் திரிபு சற்று அடங்கும் தன்மையே எகரம் ஆம் ஏழாம் நிலேயாகும்.

இந்நிலே செறிவுறுதலால் மேல்நிலேயை எட்டும் வண்ணம் அகரத்தின் அரவமாம் ஓசை தோன்றுகின்றது. அதுவே ஆரமாக அமைகின்றது.

அ, அரவம் ஆரம் என்பது மரூஉமொழி

மேல்நிலேயை எட்டத் தோன்றும் ஓசையே எட்டு என்று கூறப்பெறுகிறது.

எட்டாம் நிலேயை எட்டும் வரிவடிவமே ‘அ’ என்பதாகும். இதுவே எட்டு என்னும் இலக்கத்தின் குறியீடாக அமைகிறது.

அகரத்தின் வரிவடிவ நிலேயிஜேப் பின்வரும் நூற்பாக்களால் விளக்குகின்ருர்கள் எம்சற்குருநாதப் பெருந்தகையார் அவர்கள்

“நிலேயின் நின்ற நெறியின் உயிரணு
விண்டு மனேவாய் வியையக் கீழ்மேல்
ஆகித் திரிவுரு வமைவே அகரம்.”

Koviloor Digital Library



உயிராம் அணு பரத்தோடு ஒன்றி நின்ற நிலையினின்றும் நீங்கி மனமும், வாயுவும் தன்னொடு பொருந்துதலால், கீழும் மேலுமாகத் திரிகின்ற உருவமே அகரம் ஆகும்.

இதில்

நிலையில் நின்ற நெறியே புள்ளி

உயிரணு விண்டு வொன்றிம னோவாய்

வியையக் கீழ்மேல் எய்துவ புள்ளடி.

இதில் ஆன்மா பரத்தோடு ஒன்றிநின்ற நெறி ● இந்தப் புள்ளி வடிவம் ஆகும்.

உயிராம் அணுவானது பரத்தின்று நீங்கி மனமும் வாயுவும் பொருந்துதலின் கீழாகவும், மேலாகவும் அலையும் நிலையே பறவையின் அடியாகிய ௮ இந்த உருவம் ஆகும்.

புள்ளி யடியிற் பொருந்தா தொருபுறம்
கோடித் திரிபு கொள்வது கோடு.

பறவை அடியின் அளவையில் அமையாது ஒருபுறம் கோணலாகித்திரியும் திரிபு கொள்வதே கோடாகும். ௮ இந்த முழு உருவம் உயிரணு பரத்தினின்று பிரிந்து மனோவாய்வால் கீழ்மேலாக அலைந்து கோடித்திரியும் நிலையினை விளக்குவதாகிறது.

அகரத்தின் ௮ இந்த வடிவம் மூக்கினில் சுழித்து மணிபூரகம் சென்று ஆக்ஞை வரை சென்று திரியும் நிலையைக் காட்டுவதாகும்.

ஆக்ஞை மனித சரீரத்தின் எட்டாம் கூறுபாடாம் சிரத்தில் அமைந்துள்ளதாகும். ஆகவே எட்டாம் நிலைவரை செல்லும் அகர உருவம் எட்டு என்னும் இலக்கத்தின் குறியீடு ஆக அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த எட்டின் உருவமாகிய ௮ மேல்நிலையை எட்டும் நிலையினையும் குறிப்பதாகிறது.

Koviloor Digital Library



## நூற்பா - கூ

முதன்மை பெற்று முன்னின் றெல்லை
யறியா தான வவலந் தீர
உஅன் ருெம்என நின்ற வொன்ருெம்
பதியுருத் தாங்கியொன் பதுஎன மொழிய
நெருப்பா றெதிரில் நின்றிடு மெழுகென
உருகுந் தொண்டர் உருவம் உடையஃ
தான இலக்கம் ஆகும் கூ (கூ)

## விளக்கம்

மெய்யெழுத்திலும், உயிர்மெய்யெழுத்திலும் முதன்மை பெற்று முன்னிற்கும் எழுத்து 'க' என்பதற்கும் முதல் எண்ணுகிய ஒன்றினைக் குறிக்கும் குறியீடாகவும் விளங்குவது ககரம்.

இங்ஙனம் முதலாக விளங்கி முதன்மை நிற்கும் க கரத்திற்கு, தனக்கு நிறைவு தரும் எல்லையினை அறியாமல் இருப்பது அதற்குரிய தாழ்வாகும்.

அந்தத் தாழ்வு நீங்கும்படி உ அன்று (இரண்டு அன்று) என விளங்க நிற்கும் ஒன்று பத்து என்னும் பதியுருவத்தைத் தாங்குதால் ஒன்பது என்று சொல்லப்படும் தன்மையையடைகிறது.

இது, ஒன்று என்பது பத்தின் இயல்பினைப் பெறுவதால் ஒன்பது என்று வழங்கப்பெறுகிறது. இது வழங்கும் மொழி ஒலியாகும்.

ஒன்று + பத்து என்பது ஒன்பது எனப்புணரும். ஒரு பஃது என்றும் வழங்கப்பெறும். இதனுல் ஒன்ருெம் உயிர் பத்தாம் பதியுடன் ஒன்றி, ஒன்று, பத்தாகிய நிலையை எய்திவிட்டது. தனக்கு உரிய எல்லையை யடைந்தது. அதன் இழிவும் நீங்கியது.

ஒன்ருகிய ஆன்மாவும் பத்தாகிய பரத்தையடையின் தனக்குரிய இழிநிலை நீங்கப்பெறும் என்பது இதனுல் பெறப்படும் கருத்தாம்.

இவையே ஒன்பது என்று சொல்லும் நிலைக்கு பெருந்தகையார் கூறும் விளக்கம் ஆகும்.

Koviloor Digital Library



ஒன்பது என்னும் இலக்கத்தின் வரிவடிவம் ' கூ ' இஃதாகும்.

' சா ' இந்த வடிவம் ஆறு என்னும் இலக்கத்தின் குறியீடாகும். இக்குறியீட்டினுல் மூலக்கனல் மூளும் செயற்பாடு விளங்கும்.

'க' மூலமாகிய இவ்வடித்தில் காலாகிய 'ா' இவ்வடிவம் ஒன்றுதலே ' சா ' இந்த வடிவம் ஆகின்றது. இது ஆறு என்னும் இலக்கத்தைக் குறிப்பதாகும். இக்குறியீட்டில் 'கூ' ஒரு சுழியுடன் கால் என்னும் வடிவம் துவண்டு குழையும் தன்மையாம் நெகிழ்ச்சியும் பெறுகிறது.

' சா ' இந்தக் குறியீடு ஆறு என்னும் தமிழ் இலக்கத்தையுணர்த்தும். ஆறு என்னும் சொல் செந்நெறி, முத்திநெறி என்பனவற்றை உணர்த்தும். அஞ்சில் அடங்கி அழியாது மூலமாம் நிலையை அடைதலின் இஃது ஆறு என்று கூறப்பெறுகிறது. ஆவளி நாசி வழிச்செல்லாது மேனிலையாம் சிரமென்னும் வரையிற்புகுந்து பிடரியின்வழி மூலத்தினை அடையும் செயல் இடையீடின்றி நடைபெறின் அந்த அற்புதச் செயலால் மூலக்கனல் மூண்டெழுந்து மேல்நோக்கிச் செல்லும். அதனை நெருப்பு ஆறு என்று இயம்புவது அட்டாங்க யோகியரது மரபாம்.

மூலக்கனலாம் நெருப்பாறில் நிலைபெறும் மெழுகு எங்ஙனம் உருகுமோ அங்ஙனம் ஞானியர்கள் உருகும் தன்மையைக் காட்டுவதே 'கூ ' ககரத்துடன் கூடிய ெ இக்குறியீட்டின் செயலாம்.

அகல்விளக்காம் தீபத்தில் இட்டமெழுகு உருகித் தன்னுரு மாறிவிடுதல் போல நெருப்பாறில் உருகும் தொண்டரின் உருவமும் மாறி பதியின் நிலையினைப் பெறூஉம் என்பது இதனுற்புலனும்.

இங்ஙனம் மூலக்கனல் மூண்டு, எழுந்து சென்று சந்திர மண்டலமாம் சிரத்தில் அடைவதனை அங்கிதாரணை என்று அட்டாங்க யோக நெறியின் சித்திபெற்ற ஞானியர் நவில்வர். நெருப்பினுல் உணவு அமைத்து அமுதென உண்டு வாழ்தல் உலகமாந்தரின் இயல்பு. மூலத்து மூண்டு எழுந்து மேல்நோக்கி எதிர்த்துப் பாயும் கனலாம் நெருப்பு ஆற்றினுல் அமுதம் அமைய உடலின் அகமும் புறமும் குளிரும்படி நிறைந்து அமைதல் ஞானியரின் இயல்பாகிறது. அதனை அடுத்துக் காண்போம்.

Koviloor Digital Library



## நூற்பா - ௰

பதியக் கொண்டும் பதிந்து நின்றும்
விளங்கிப் பதிற்றென விள்ளும் ஒலியும்
பாசு பதமாய்ப் பகரும் உருவும்
அமைய மயிர்ப்பால் ஆம்என நிற்கும்
இயல்பைக் கொண்ட இலக்கம் ௰ (௰)

## விளக்கம்

உயிர்ப்பொருள், உயிர் அல்லாத பொருள் ஆகிய அனைத்தும் தன்னிடம் பதியும் வண்ணம் அவற்றை அகப்படுத்தியும், அனைத்துப் பொருள்களிலும் தான் பதிந்து நிலைபெறுதலும் ஆகிய செயல்கள் விளங்கித் தோன்றுதலால் பதிற்று (பத்து) என்று அனைவராலும் வெளிப்படையாகக் கூறும் ஒலியும், பாசுபதம் என்று பலராலும் சொல்லப்படும் வல்லவம் மிக்க ஆயுதத்தின் உருவ வடிவம் அமையப்பெற்று, மயிர்ப்பாலம் ஆம் என நிலைபெறும் தன்மையைக் கொண்ட இலக்கத்தின் உருவம் பத்துக்குரிய '௰' என்னும் இந்த வடிவமாகும்.

பரம்பொருள் மகாப்பெரிய ஊழிக்காலத்தில் உலகங்களையும், அகண்டங்களையும் அவற்றில் உள்ள பொருள்களையும் ஒன்றும் அணுவாக்கித் தன்னிடம் பதியச் செய்து கொள்கிறது.

இந்த நிலை சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும் என்னும் திருவாசக அடியால் விளங்கப்பெறும்.

ஓர் அணுவாய், பரம்பொருளால் பதியக்கொண்ட பலகோடி அண்டங்களும், அகண்டமும், உயிர்ப்பொருளும், உயிரல்லாத பொருள்களும் மீண்டும் தோன்றுங்காலத்தில் இறைவனுருடைய நோக்கத்தால் அவ்வவற்றிற்கு உரிய தன்மைகள் அமைகின்றன.

அண்டங்களும், உலகங்களும், வானம், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களின் கலவையால் ஆயின.

இவற்றின் ஒளிப்பிழம்புகளாகிய சூரியனிடத்தில் ஒளியையும், சந்திரனிடத்தில் குளிர்ச்சியையும் தீயினிடத்தில் வெப்பத்தையும் உண்டாக்கி இருக்கிறார் இறைவனார்.

Koviloor Digital Library



ஐம்பூதங்களில், வானத்தில் பரவிய நிலையாகவும் காற்றில் வலிமைமிக்க ஊக்கமாகவும், தீயில் வெப்பமாகவும், தண்ணீரில் சுவையாகவும், மண்ணில் திண்மையாகவும் பரம்பொருள் இயல்பு பதிந்திருக்கிறது.

இந்த ஐம்பூதங்களினுல் தோன்றும் அண்டங்களிலும், உலகங்களிலும் எந்தப் பொருள் எவ்வாறு அமைய வேண்டுமோ அந்தப் பொருளை அவ்வாறே அமைத்திருக்கிறது பரம்பொருளின் நியதி.

பூதவுலகில் பொருள்களை இயங்கச் செய்யும் இயக்கியாகவும் அப்பரம்பொருள் விளங்குகின்றது.

இவையே பரம்பொருள் பிறவற்றின் கண் பதிந்துள்ள நிலையாம்.

மேற்கூறியவையே பரம்பொருள் பிறவற்றைப் பதிக்கும் நிலையும், .ஏனைய பொருள்களில் பதியும் நிலையும் ஆம்.

பதிக்கும் நிலையும், பதியும் நிலையும் உள்ளமையால் பரம்பொருள் பதிற்று என்று பகரப்பெறுகிறது.

இன்றைய ஏவுகணையைக் காட்டிலும் பலமடங்கு ஆற்றல் உடையது பாசுபதம் என்னும் பேராயுத அத்திரம்.

ஏவுகணை, குறிதப்பி வீழினும், பாசுபதம் தப்பாது பகையை அழிக்கும் தகைமையது.

ஏவுகணை எந்திரத்தினுல் செலுத்தப்படுவது.

பாசுபதம் மனமந்திரத்தினுல் எய்யப்படுவது.

ஏவுகணை பல மூலப்பொருளால் செய்யப்படுவது. இதற்கு நாயகர்கள் மக்கள். பாசுபதம், இறைவனுரை நோக்கிச் செய்யும் தவத்தால் பெறப்படுவது. ஆதலின் பாசுபதம் மனத்தால் எண்ணிவிட்டாலோ பகைவர்களைப் பொடியாக்கி மீண்டும் எய்தவர்கைக்கே வந்து சேரும்.

பாரதயுத்தத்தில் பல ஆயுதங்களைக் காட்டிலும் பாசுபதம் தேவையாக இருந்தது. பாசுபதம் பெற அருச்சுனன் செய்த தவம் யாரும் செய்திருக்கமாட்டார்கள்.

தேவர்கள், கந்தருவர், சான்ருேர், மக்கள் ஆய பலரும் அருச்சுனன் தவக்கனல் வீச்சுக்கு அலறிப்பதறினர்.

Koviloor Digital Library



பார்வதி தேவியும், அருச்சுனனுக்கு விரைவில் அருள வேண்டுமென்று பரம்பொருளிடம் பரிந்துரை செய்தாரென்னின், மற்றுயாவரைப் பற்றி என்ன கூற இயலும்?

அருச்சுனன் தவமியற்றிப் பெற்ருன் பாசுபதம்.

பசு என்னும் சொல் ஆன்மாவைக்குறித்து வழங்கும் சொல்லாம். பசு பதமாகிய முத்தியை (பதத்தை)ப் பெறுவதைக் குறிப்பதே பாசுபதம் என்னும் தொடரின் பொருளாம்.

பாசுபதம் என்பது நீண்டகாலம் செய்யும் தவத்தால் பெறுவதொன்ருகலின் பசு என்பது முதல் நீண்டு பாசு என்று ஆயது. இங்ஙனம் நீட்டல் விகாரமும் ஆன்ற பொருளைத் தருவதாகிறது. பசுவுக்கு நிறைவு தருபவர் இறைவராம் பதியாவர்.

பத்து என்னும் சொல் வருமொழி இயைபால் பதி எனத்திரியும். பத்து என்பதே பதி என ஆயது என்பது இதனுல் புலனும்.

பாசுபதம் என்னும் பேராற்றல் உடைய ஆயுதம் பரம்பொருளின் வடிவமாகவே அமைந்ததாகக் கருதப்படுகிறது.

அந்த வடிவமே சூலவடிவில் திகழும் 'ய' கரமாகும்.

இறைவனுரின் பல ஆயுதங்களில் சூலமும் ஒன்ரும். சூலம் மூன்று இலை வடிவாய் நீண்டு இருக்கும். இந்த வடிவம் ஆன்மாவைத் தொன்றுதொட்டே பற்றிப் பிணைந்து நீங்காது நிலைத்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அடியொடு அழித்து துப்புரவாக்கும் என்பதைப் புலப்படுத்துகின்றது.

திரிசூலத்தின் செயல் முதல்வனுரின் செயலாகவே கொள்ளப்பெறும்.

இந்த அரிய செயற்பாட்டினை அழுக்கடையாமல் ஆண்டு கொண்டருள்பவன் கழுக்கடை தன்னைக் கைக்கொண்டருளியும் மூலமாகிய மும்மலம் அறுக்கும் தூய மேனிச் சுடர்விடு சோதி என்னும் திருவாசகத் திருவண்டப்பகுதி அடிகள் நன்ருக விளக்கும்.

திரிசூலம், இறைவனுரின் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி

Koviloor Digital Library



ஆகிய மூன்று சத்திகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் உணர்த்துவதாகிறது.

ஆகவே, பத்தாம்பதியின் வடிவத்தினை குறிக்கும் குறியீடாக 'ய' இவ்வடிவம் அமைகிறது. இவ்வடிவம் மும்மலங்களை அறவே நீக்கித்துடைத்து பதியொடு ஆன்மா ஒன்றும் நிலையை அடைதற்குக் காரணமாக அமைதலோடு, இறைவனுரின் கருணைக் கடலுள் ஆழ்ந்து அமிழ்ந்து ஏகமாம் நிலையையுணர்த்தும் மயிர்ப்பால் அம் என்னும் அமிததாரணையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. மாந்தர்களின் உரோமங்கள் 3½ கோடியென வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் மேனியிற்சுருள்சுருளாக சுருண்டு நிற்பதை நோக்கின் யகரமாகிய இவ்வடிவம் இவ்வாறு 'ய' தலைகீழாக நிற்பது புலப்படும்.

இந்த வடிவத்தில் அமுதமாம் துளி பரவி நிற்பதே மயிர்ப்பால் அம் என்று குறிப்பிடப்படும் உரோமத்தின்பால் அமுதத்தின் துளி நிலைபெறும்.

இந்நிலையே மயிர்ப்பாலம் என்று அட்டாங்க யோக சாதனம் நிறைவுற்ற மகாஞானியர் நவில்வர்

இதனை

வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்றழைக்
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்து
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் என்னும்

திருவாசகத்தின் மூன்றும் அகவலாகிய திருவண்டப்பகுதி அடிகள் விளக்குகின்றன.

இறைவன், சொல்லுதற்கரிய பேரானந்தம் தரும் அமுதத்தின் துளிகளை உரோமக்கால்கள் தொறும் தேக்கி நிலைபெறும்படி செய்தனன். கொடியவனுகிய என்னுடைய உடலை இருப்பிடமாகக் கொண்டு, வியக்கத்தக்க அமுததாரைகளை எலும்பின் துவாரங்களிலெல்லாம் ஏறும்படி பண்ணினுன்.

Koviloor Digital Library



அமுதத்துளிகளை உரோமக்கால்கள் தொறும் தேக்கிடச் செய்ததோடு அல்லாமல் அமுதத் தாரைகளை எலும்பின் துவாரங்களிலும் ஏற்றினன் என்றும் பெருமான் கூறுவது உடம்பு முழுவதையும் அமுதமயமாகவே இறைவன் ஆக்கியுள்ள தன்மை புலப்படும்.

உரோமங்கள் தோறும் அமுதத்துளிகளைத் தேக்கி நிலைபெறச் செய்தது புறத்தின் நிகழ்ந்த செயலாம்.

எலும்பின் துளைகளிலும் அமுதத்தாரைகளை ஏற்றிடச் செய்தது யாக்கை அகத்து நிகழ்ந்த செயலாம்.

இங்ஙனம் புறத்தும் எலும்பின் அகத்தும் அமுதத்துளிகளைத் தேக்கியும் அமுதத்தாரைகளை ஏற்றியும் நிலைபெறச் செய்தலின் யாக்கை அமுதமயமாகவே ஆகியது என்பது விளங்கும்.

இந்த அமுதப் பெருக்கிடை ஊறித்திளைத்துத் திகழ்கின்ற ஆன்மா தூய்மையடைந்து பதியை அடையும் பாக்கியம் பெறுகின்றது.

இவற்றினையே பத்து என்னும் சொல்லொலியும் அதனை எண் வடிவாகக் காட்டும் "ய" என்னும் வரி வடிவும் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்தும்.

இவ்வாறு எண்களை (இலக்கங்களை) விளக்கிக்காட்டும் குறியீடுகளும் யோக ஞான சாதனத்தின் நிலையினையும், அவற்றால் உண்டாகும் பேற்றினையும் உணர்த்துமாயின் அந்தக் குறியீடுகளையுணர்ந்து வரைந்து வரையறுத்துக் காட்டிய தெய்வத்தமிழ் ஞானியர்களின் பெருமையினை எங்ஙனம் அளவிட்டுக்கூற இயலும்?

௧ என்னும் இந்த வடிவம் தூலசூக்குமமாய் ஒன்று என்னும் இலக்கக் குறியீடாய் அமையும். இது அகநிலையாம். ா என்னும் இந்த வடிவம் ஒன்றாக ஒன்றி இயைந்த நிலை நீங்கி ரவை அண்டி இரண்டு என்று சொல்லும் வண்ணம் அமைந்த உருவமாம். இது அகப்புற நிலையாம்.

'௩' என்னும் இந்தக் குறியீடு பிரிந்த நிலை மீண்டும் ஒன்றுபட இம் என வளியை அடக்கி மேற்செல்ல முற்படு நிலையாம். ஆகையால் இம் என வளியை ஊன்றுதலால் ம் + ஊன்று மூன்று என ஆகி மூன்றாம் இலக்கத்தையும் வெளிப்படுத்தும் குறியீடாய் நின்றது இது புற நிலையாம்.

Koviloor Digital Library



'ச' என்னுங் குறியீடு நான்கு என்னும் இலக்கத்தை (எண்ணினை) உணர்த்துவதாகும்.

ஃ இந்தக் குறியீடு இரண்டு அல்ல ஒன்று என்னும் இலக்கத்தைக் குறிப்பதாகும். இந்த வடிவம் தன்னுடைய தன்மையினின்றும் நீங்கி 'ச' என்னும் வடிவத்தைப் பெற்று அத்துடன் அமையாது மேல்நோக்கிச் செல்லும் ஒருகோடு பெற்று புறப்புறமாய் வெளியிற் செல்லும் நிலையைக் குறிப்பது ச இந்தக் குறியீடாகும்.

இது நான்காம் நிலையாகிய புறப்புறத்தை உணர்த்தி வெளிப்படுத்தலின் ச என்னும் இந்தக் குறியீடு நான்கு என்னும் இலக்கத்திற்கு உரியதாகிறது. நான்காம் நிலையை எய்திய ஆவளி மீண்டும் முதல் நிலையை அடைதற்கு நாசி வழிச்செல்லாது சிரத்தின்கண் உட்படுதலைக் காட்டும் குறியீடு 'ரு' இந்த வடிவம் ஆகும்.

'ர' இந்தக் குறியீடு ஆவளியை உணர்த்துவதாகும். இதற்குக்கால் என்றே பெயரிட்டிருக்கின்றனர். இந்தக்கால் புறப்புறமாய் வெளியிற் செல்லாமல் இமயமாம் சிரத்தில் தலைப்படு தலைப்படுதலைக் காட்டுவதே இந்தக் குறியீடாகும்.

இவ்வாறு ஆவளி சிரத்தில் படுதலால் ஐம்புலன், ஒடுக்கம் பெறுகிறது. அந்நிலையைக் காட்டுவதே ரு இந்தக் குறியீடாகும். ஐம்புல வொடுக்கத்தைக் குறிப்பதால் ஐந்து என்னும் எண்ணின் குறியீடாக இது அமைகிறது.

'சா' இந்தக் குறியீடு ஆறு என்று கூறப்படும் இலக்கத்தினை உணர்த்தும். ஆவளி ஐம்பூதக் கூறுபாடு உடைய யாக்கையில் ஓயாது அலைந்து திரிதலின் ஆக்கையே உயிர் என்று கருதப்படும் நிலையாயது. இந்த ஐம்பூதக் கூறுபாட்டையும் மிஞ்சி ஒன்ரும் இலக்கை உணர்த்தும் ககரத்தில் நிலைபேருக சா இங்ஙனம் ஒன்றி உரம் பெறுதலின் அஞ்சின் மேல் ஒன்ரும் ஆறு என்னும் இலக்கத்தை விளக்குகின்றது.

'எ' இந்தக் குறியீடு ஏழு என்று சொல்லப்படும் ஒலியையும், அதன் இலக்க உருவத்தையும் தெளிவுபடுத்துகின்றது. நாதங்கலந்த உயிர் வளி வழி வெளிச் செல்லாது, வேகாத்தலையில் சஞ்சரிக்கும் காலத்தில் சாதகற்குத் தோன்றும் ஒலி, எகரம் ஆகும். அகர வருக்கத்தில்

Koviloor Digital Library



ஏழாவதாக எகரம் வருதலால் ஏழு என்னும் இலக்கத்தின் வடிவாகவும் திகழ்கிறது.

'அ' இந்தக் குறியீடு எட்டு என்று கூறப்படும் உயிரையும், அதற்குரிய எண்ணும் இலக்கத்தையும் குறிப்பிடுவதாகிறது.

ஆவளி ஆறலை கொண்டு அலைந்து திரிந்தது மாறி ஏழாய்ச் செறிவுற்று தனக்குரிய உயர்நிலையை எட்டி ஒன்றத் தலைப்படுங்கால் தோன்றும் ஆரவாரம் உயிரின் ஆரம் ஆதலின் அகரம் எட்டு என்னும் உயிரின் ஒலியைப் பெறுகிறது. அஃது எட்டாம் நிலைவரை நின்று எட்டப் பார்ப்பதால் எட்டு என்னும் இலக்கக் குறியீடாகவும் அமைகிறது.

'௯' இந்தக் குறியீடு ஒன்பது என்று கூறப்படும் ஒலி நிலையினையும், அதற்குரிய இலக்க வடிவினையும் பெறுகிறது.

'க' என்னும் ஒன்று 'ய' என்னும் பத்தாம் இயைபினைப்பெற ஒன்றுதலின் ஒன்பது என்னும் ஒலியினையும், அதற்குரிய இலக்க உருவினையும் பெறுகிறது.

க இது ஒன்று. இதன் வடிவத்தில் சற்று மாற்றங்கொண்டு பத்தின் தலைகீழ் வடிவத்துடன் இயைந்து ௯ (ஒன்பது) என்னும் இலக்க வடிவினைப் பெறுகின்றது. ஒன்று பத்தினைப் பெறுவதாலும், பத்து தலைகீழாக ஒன்றில் பதிவதாலும் ஒன்பது என்று கூறப்படுகிறது. அதன் எண் இலக்கத்தையும் பெறுகிறது.

ய இந்த வடிவம் பத்து என்னும் அதற்குரிய சொல்லொலியையும், அதன் எண் இலக்கத்தையும் குறிப்பதாகிறது. ஒன்றினைப் பதித்தலும், ஒன்றில் பதிலும் ஆகிய இருவகை நிலையும் இது உடையதாக இருத்தலின் பத்து என்பதன் இருவகை நிலையும் பெறுகின்றது.

இந்தத் தொகுப்புரை படிப்பவர்களின் உள்ளத்தில் நன்கு பதியவே தரப்பட்டுள்ளது.

இங்ஙனம்
உரையாசிரியர், புலவர், க.அப்பாராசன்.
(களிமேடு - தஞ்சை)

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 46362

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# ஐம்பெரும் பதிகம்

சந்திரற் சடையில்வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர்பெம்மான் ஆனல்வெள் ளூர்தியான்தன்
மந்திர **நமச்சிவாய** வாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையுநோயும் வெவ்வழல் விறகிட்டன்றே.

*தேவாரம் அப்பர்* - சு

நானேயோ தவஞ்செய்தேன் **சிவாயநம** வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

*திருவாசகம் மணிவாசகர்* - அ

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுஉண்டே? அன்பொடு
தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்து உள்வைத்து உள்ளம் அள்ளூறும் தொண்டருக்கு
எண் திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும் பவளவாய்
அவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கைகொண்ட சோளேச்சரத்தானே

*கருவூர்த்தேவர் திருவிசைப்பா* - கூ

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன்; பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறிஉமை மணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும்அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

*சேந்தனார் திருப்பல்லாண்டு* - கூ

பண்ணின் பயனாம் நல்லிசையும் பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும் கருத்தின்பயனாம் **எழுத்(து) அஞ்சும்**
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப்பயனாம் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின்பெருமை வரம்புடைத்தோ.

*சேக்கிழார் பெரியபுராணம்* - ௱உ

**திருச்சிற்றம்பலம்**

Koviloor Digital Library

உ

சிவமயம்

யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அறமெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

- கந்தர் அனுபூதி

அழகப்பா ஆப்செட் பிரிண்டர்ஸ் (வசந்தா பிரஸ் கட்டிடம்)